# மாணவர்களை நூலகத்துக்கு வரவையுங்கள் இந்தியா வல்லரசாகிவிடும்!

ஆனந்த் வி.ஆர்.

தமிழ் மொழி செம்மொழியாய் கொண்டாடப் படுகிற இந்த மாதத்தில் கல்விக்கு ஒரு கண்ணாக நூலகம் உள்ளதோ என்று என்தன் சிந்தனை ஓட்டம் தன் பயணத்தை துவக்கியது. இன்றைய சமுதாயத்தை மேம்படுத்த கல்வி எப்படி தேவையோ, அதுபோல் அந்த கல்வியை வாழவைத்துக் கொண்டிருப்பது இந்த நூலகம்தான் என்றால் அது சற்றும் மிகையில்லை. கல்வியும், நூலகமும் உயிருடன் கலந்த உடலாகத்தான் இருக்க முடியும். உடலான நூலகம் இல்லையேல் கல்வி இவ்வளவு வளர்ச்சி கொண்டிருக்குமா? அறிஞர்களையும், படைப்பாளிகளையும், ஆசிரியர்களையும் இந்த சமுதாயம் பெற்றிருக்குமா? ஆனால் இன்று எத்தனைபேர் இந்த நூலகத்தை முறையாக அடைந்து பயன்பெறுகின்றனர்? திருவள்ளுவர் கூறுகிறார்,

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்

என்று. அதாவது மக்கள் எவ்வளவு மேன்மை யானவர், அவர்களே மிக தாழ்மையானவர்தான் அவர்கள் படித்த அறிஞர்களோடு உறவு கொள்ள தவறினாள் எனில் என்பதே இந்த குறள் மூலம். இன்றைய கால கட்டத்தில் எத்தனை மாணவர்கள், இளைஞர்கள் படித்த மேதைகளை சந்திக்கின்றனர். அல்லது முடிந்தவரை அவர்களது ஊரிலுள்ள படித்த மூத்தவர்களையாவது சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்கின்றனர்? இல்லை என்பதே பல பதில்கள்.

மாணவர்களுக்கு கல்வியறிவை புகட்டும் கல்வி நிலையங்களாவது இந்த வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கின்றனவா எனில் அதுவும் பூஜ்ஜியம்தான்.

ஒரு மாணவன் என்றால் (குறிப்பாக கல்வி யறிவை மேம்படுத்த உதவும்) என்ன வயது? அதைத் தான் ஆங்கிலத்தில் 'டீனேஜ்' என்று அழைக்கின்றனர். நாம் கற்பூர வயது என்றே வைத்துக்கொள்வோம். இந்த வயதில் எத்தனை மாணவர்கள் தம் பள்ளி கல்வி புத்தக பாடங்களை தவிர்த்து பொது அறிவை வளர்க்க மற்ற புத்தகங்களை படிக்கின்றனர். குறைந்தது புத்தகம் எங்கு படிக்க கிடைக்கிறது என்றாவது தெரிந்து வைத்து கொள்கின்றனரா? அல்லது அவர்களை இந்த சமுதாயம்தான் (பெற்றோர், ஆசிரியர், கல்வி நிலையங்கள்) படிக்கத் தூண்டுகிறதா? இல்லை என்பதே அதிர்ச்சி செய்தி. இதை நான் வெறும் கதையாகக் கூறவில்லை இந்த கட்டுரையின் அட்டவணை மற்றும் கீழ்கண்ட சிறு ஆய்வின் மூலம் அறியலாம்.

எனது சிறு ஆய்வின் நோக்கம் மாணவர்களால் நூலகம் பயன்படுத்தப்படுவதாக உள்ளதா என்பதே. இதற்கு இந்த குறிப்புகள் (data) மிகவும் பயனுள்ளது என்றே கூறலாம். இதற்கு நான் எடுத்த நிலைகள் இதுதான், ஒரு கிளை நூலகத்திற்கு சென்று அங்கு 5 நாட்கள் கணக்கெடுத்தேன். அதில் கலந்து கொண்ட வர்கள் மொத்தம் 78 (எழுபத்தி எட்டு நபர்கள்).

12 வயது முதல் 19 வயது வரை - 8 அதாவது 10%

20 வயது முதல் 40 வயது வரை - 29 அதாவது 37%

41 வயது முதல் 70 வயது வரை - 36 அதாவது 46%

70 வயது முதல் 90 வயது வரை - 5 அதாவது 6%

மேற்கண்ட கணக்கெடுப்பில் 20 வயது முதல் 70 வயது வரை சராசரியாக நூலகத்திற்கு செல்லும் பழக்கம் முறையே 37% மற்றும் 46%. இது சற்று குறைந்தே காணப்பட்டாலும் இவர்களை மீட்டு கொண்டுவருவது பெரிய காரியமல்ல. ஆனால் 10 வயது முதல் 19 வயது வரையுள்ள மாணவர்கள் மற்றும் இளைஞர் என்று கணக்கெடுத்தால் வெறும் 10% மாணவர்களே நூலகத்தை தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

இவ்வட்டவணையை மையமாக வைத்து அனுமானிக்கப்பட்ட சராசரியாய் மக்களை கவரும் பகுதி என்று இப்படித் தரம் பிரிக்கலாம்:

(1) கல்வி, (2) அரசியல், (3) மாநில செய்திகள், (4) நாட்டு நடப்பு, (5) விளையாட்டு, (6) சினிமா, (7) விலைவாசி, (8) ராசிபலன் (9) மற்றது

இந்த மாணவர்களின் எண்ணத்தை (படிக்கும்) எப்படி மாற்றப் போகிறோம் என்பதே பெரும் சவாலாக தென்படுகிறது. அரசாங்கத்தின் முதல் கடமை, ஒவ்வொரு ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி எல்லா வற்றிற்கும் குறைந்தது ஒரு நூலகம் (கிளை) கண்டிப் பாக வேண்டும். மேலும் சட்டத்தை சற்று கடினமாக்கி னாலும் பரவாயில்லை, ஒவ்வொரு பள்ளியிலும் (தனியார்) கண்டிப்பாக நூலகம் வேண்டும் என்பதே.

சாதாரணமாக மக்களுக்கு நூலகம் எங்கு இருக் கிறது என்றால் (சென்னையில்) கன்னிமாரா என்ற ஒரு வார்த்தைதான் வருகிறது. கிளை நூலகம் என்றால் என்ன என்றுதான் கேட்கின்றனர். ஆனால் ஊர் கோவில் எங்கு உள்ளது என்றால் 100% மக்களும் அறிவர். பொது நூலகத்திற்கு வாழ்க்கையில் ஒரு முறைகூட போகாத மாணவரும் உள்ளனர். இது மிக மிக ஓர் ஆபத்தான நிலை. நாளை இந்தியாவை நிர்ணயிப்பதே இந்த மாணவர்கள்தான். இவர்களின் அறிவு வளர்கிறது ஆனால் அது பக்குவமடைகிறதா என்றால் அது சந்தேகமே.

சரி இந்த சமுதாயத்தை திருத்த (மாற்ற) இப்படி யும் ஒரு கதை சொல்லிப்பார்த்தால் மக்கள் அதை நகைச்சுவை என்று சிரித்துவிட்டு சென்றுவிட்டனர். வருத்தமே. அந்த கதை இதுதான். கதை என்பதைவிட கவிதையே பொருத்தம். “மனிதன் செல்வத்தின் சொந்தக்காரியான லட்சுமியை விரும்புகிறான்! ஆனால் அந்த லட்சுமியோ கல்விக்கு சொந்தக்காரி யான சரஸ்வதியை விரும்புகிறாள். லட்சுமிக்கு தெரி கிறது சரஸ்வதி வந்தால் செல்லமாட்டாள் என்று.”

சரி நூலகப் பிரச்சனைக்கு மீண்டும் வருவோம். என்னென்ன குறைந்த படிகளை எடுத்தால் இந்த நூலகத்திற்கு மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க முடியும்? இதோ சில வழிகள்:

1. சிறு வயதிலேயே நூலகத்திற்கு செல்வதை பழக்குங்கள்.
2. பொது நூலகம், தனியார் நூலகம், கிளை நூலகம் வேறுபாட்டையும் பயனையும் கூறுங்கள்.
3. நூலகத்திற்கு மாணவர்கள் செல்ல கட்டாயப் படுத்துங்கள்.
4. பள்ளிகளில் நூலகத்தை ஏற்படுத்துங்கள். அதில் கண்டிப்பாக மாணவர்களை அனுப்புங்கள்.
5. அறிவியல், தொழில்நுட்பம், ஐஏஎஸ் சம்பந்தப் பட்ட புத்தகங்களையும் நூலகத்தில் வாங்குங்கள்.
6. முடிந்தவரை படிப்பு/கல்வி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை ஊடகங்களில் அறிமுகப்படுத் துங்கள்.
7. நூலகங்களில் வயதுவாரியாக பல போட்டி களை நடத்தி கவருங்கள்.
8. வென்றவர்களுக்கு நல்ல பரிசாய் வழங்கி ஊக்குவியுங்கள்.
9. ஒவ்வொரு பள்ளியிலும் (தனியார்) கிளை மற்றும் பொது நூலகத்திற்கு வருடத்திற்கு 2 முறையாவது அழைத்து செல்லுங்கள்.
10. நூலகத்திற்கு பயனுள்ள பத்திரிகைகள் வருகிறதா?
11. இன்று உலகையே சுறுக்கியிருக்கும் கணிப்பொறி, வலைபின்னல் வசதி செய்து தரப்பட்டுள்ளதா?
12. தமிழ்வழி எழுதும் இளைஞர்கள் ஊக்குவிக்க பதிப்பகத்துடன், நூலகத்திற்கு தொடர்பு ஏற்படுத்த லாம்.
13. நூலகம், பொதுமக்கள் இணைந்து நடத்தும் மன்றங்களை மேன்மைபடுத்தலாம்.
14. இரவிலும் நூலகம் திறக்க முடியுமா என்று சற்று விரிவாய் யோசிக்கலாமே?
15. மிக பழமையான நூல்களை அழியவிடாமல் பதிவு செய்தால் எதிர்காலத்திற்கு பயன்படுமே.
16. வருடாவருடம் ஓர் புத்தக கண்காட்சியையே அறிமுகப்படுத்தலாமே.

மேற்கூறிய அனைத்து யோசனைகளும் பல பொதுமக்களால் கூறப்பட்டது.

இந்த கட்டுரையின் நோக்கமே நாம் எப்படி மாணவர்களை கவரப்போகிறோம் நூலகத்திற்கு என்பதுதான். இன்று ஊடகங்கள் கிட்டதட்ட மாணவர்களின் 60% நேரத்தை களவாடிக் கொண்டிருக்கின்றது. விழித்துக்கொண்டால் நல்லது இதில் அரசாங்கமும் அடக்கம்.

| பொதுமக்களுக்கு தினமும் செய்தித்தாள் படிக்கும் ஆர்வம் உண்டா? உண்டு எனில் கீழ்கண்ட எந்த பகுதி உங்களை அதிகம் கவருகிறது. (ஒன்றுக்கு மேல் இருந்தாலும் தேர்வு செய்க.) | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண். | வயது | கல்வி | சினிமா | நாட்டு நடப்பு | ராசி பலன் | விளையாட்டு | அரசியல் | மாநில செய்திகள் | விலைவாசி முடிவுகள் | மற்றது |
| 1 | 65 | ✓ | | ✓ | | | ✓ | ✓ | ✓ | ✓ |
| 2 | 56 | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | |
| 3 | 57 | ✓ | | | | | ✓ | ✓ | | |
| 4 | 29 | ✓ | ✓ | | | | ✓ | | | ✓ |
| 5 | 18 | ✓ | ✓ | | | | | | | |
| 6 | 56 | | | | | | | | | |
| 7 | 32 | ✓ | ✓ | | ✓ | | | | | |
| 8 | 58 | ✓ | | ✓ | ✓ | | ✓ | | | |
| 9 | 63 | | | ✓ | | | | | | |
| 10 | 66 | | | | | | | | | |
| 11 | 24 | | | | | | | | | |
| 12 | 29 | | | | | | | | | |
| 13 | 60 | | | | | | | | | |
| 14 | 64 | | | | | | | | | |
| 15 | 32 | ✓ | | | | | | | | |
| 16 | 32 | ✓ | | | | | | | | |
| 17 | 50 | | | | | | | | | |
| 18 | 45 | ✓ | | | | | | | | |
| 19 | 11 | | ✓ | | | | | | | |
| 20 | 17 | | ✓ | | | ✓ | | | | |
| 21 | 67 | | | | | | | | | |
| 22 | 44 | ✓ | | | | | ✓ | | | |
| 23 | 17 | | | | | | ✓ | | | |
| 24 | 52 | ✓ | ✓ | | | ✓ | ✓ | | | |
| 25 | 58 | | | | | | ✓ | | | |
| 26 | 64 | ✓ | ✓ | | | ✓ | ✓ | | | |
| 27 | 27 | | | | | | ✓ | ✓ | | |
| 28 | 49 | | | | | | | | | |
| 29 | 52 | | | | | | | | | |
| 30 | 15 | | | | | | | | | |
| 31 | 60 | | | | | | | | | |
| 32 | 50 | | | | | | | | | |
| 33 | 17 | ✓ | | | | | | | | |
| 34 | 45 | | | | | ✓ | ✓ | ✓ | | |
| 35 | 80 | ✓ | | | ✓ | ✓ | ✓ | | ✓ | |
| 36 | 29 | ✓ | | | | | | | | |
| 37 | 60 | | | | | | | | | |
| 38 | 21 | ✓ | | | | | | | | |
| 39 | 59 | | | | | | | ✓ | | |